# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1924/39 - 2015 ජූලි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.07.23

1924/39 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: உது 2/2/10/23.
காணி அமைச்சின் இல.: L/3J/95/FR/154

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உடதும்பர பிரதேச செயலாளர் பிரிவில் கரபகெடிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வின்பீல்ட்பார்க் வத்த நில அளவை யாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இலக்கம் மஹ 6361 உம் சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட 4.2745 ஹெக்டயார் அளவிலான காணி
உரிமை கோறுபவர்கள் : கே. ஏ. பீ. சந்திரலால் - இல. 211/ஏ, பன்சல வீதி, அகரவிட, கம்பஹ.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உடதும்பர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எம். ஜீ. ஏ. திலக்கரத்ன,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

பிரதேச செயலகம்,
உடதும்பர,
2015, யூன் 24.

8 - 179

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.: PAN/LAN/03/01/Acq/22/KDS/PAN/LAN/04/02/16
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2006/FR/220

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் பன்வில பிரதேச செயலாளர் பிரிவில் பலிஸ்பத்து கோரளை மேற்கு உப பிரிவில் பத்தேகம கிராமத்தில் அமைந்துள்ள காணியின் கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரால் 2014.02.20 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட மஹ/6327 ஆம் இலக்க அடிப்படை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "கெடல்ஒய வத்த" எனும் காணியின் துண்டு இல. 1,3,5 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 1.3456 ஹெக்டயார் விஸ்தீரண முடைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்கு உட்பட்ட பகுதி.

**1. துண்டு இல. 1 - காணியின் பெயர்: கெடல்ஒய வத்த; விஸ்தீரணம்: 0.0468 ஹெக்டயார்.**

**எல்லைகள்**

வடக்கு: அருவி, ஆர். பி. வி. ஜயந்த மற்றும் ஆர். ஈ. சி. வைத்தியதிலக ஆகியோர் உரிமைகோரும் கெடல்ஒய வத்த; கிழக்கு: ஆர். ஈ. சி. வைத்தியதிலக உரிமைகோரும் கெடல் ஒய வத்த மற்றும் அருவி; தெற்கு: துண்டு இல. 02; மேற்கு: துண்டு இல. 02, அருவி மற்றும் யூ. ஆர். பி. ஏ. ஜயந்த உரிமை கோரும் கெடல்ஒய.

**2. துண்டு இல. 03 - காணியின் பெயர்: கெடல்ஒய வத்த; விஸ்தீரணம்: 0.4910 ஹெக்டயார்.**

**எல்லைகள்**

வடக்கு: யூ. ஆர். பி ஏ. ஜயந்த உரிமைகோரும் கொடல்ஒயவத்த, அருவி மற்றும் துண்டு இல. 02; கிழக்கு: துண்டு இல 02 மற்றும் ஆர். ஈ. சி. வைத்தியதிலக உரிமைகோரும் கொடல்ஒயவத்த; தெற்கு: ஆர். ஈ. சி. வைத்தியதிலக உரிமைகோரும் கோடல்ஒயவத்த, அருவி மற்றும் துண்டு இல. 04; மேற்கு: துண்டு இல. 04 அருவி மற்றும் யூ. ஆர். பி. ஏ. ஜயந்த உரிமைகோரும் கெடல்ஒயவத்த.

**3. துண்டு இல. 05 - காணியின் பெயர்: கெடல்ஒய வத்த; விஸ்தீரணம்: 0.8078 ஹெக்டயார்.**

**எல்லைகள்**

வடக்கு: யூ. ஆர். பி ஏ. ஜயந்த உரிமைகோரும் கொடல்ஒயவத்த, அருவி மற்றும் துண்டு இல. 04; கிழக்கு: துண்டு இல 04 மற்றும் ஆர். ஈ. சி. வைத்தியதிலக உரிமைகோரும் கொடல்ஒயவத்த; தெற்கு: ஆர். ஈ. சி. வைத்தியதிலக உரிமைகோரும் கெடல்ஒயவத்த, மற்றும் அடிப்பாதை; மேற்கு: அடிப்பாதை மற்றும் யூ. ஆர். பி. ஏ. ஜயந்த உரிமைதோரும் கெடல்ஒயவத்த

உரிமை கோருபவர்: ஆர். ஈ. சி. வைத்தியதிலக,
இல. 06, அறலிய மாவத்தை,
சிறிமல்வத்த உயன,
இரத்மலான.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015.09.16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பன்வில பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015.08.31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஜீ. எச். எம். ஏ. பிரேமசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
பன்வில

பன்வில பிரதேச செயலக அலுவலகம்,
2015, யூலை 08.

8-180

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.